**சுருக்கம்**

உயர்கல்வி – கல்லூரிக் கல்வி – சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் – கிருஷ்ணகிரி மாவட்டம், ஸ்ரீ பாலாஜி கல்வி அறக்கட்டளை சார்பில் கிருஷ்ணகிரி மாவட்டம், காட்டிநாயனப்பள்ளி கிராமத்தில் ராஜீவ் காந்தி கலை மற்றும் அறிவியல் (மகளிர்) கல்லூரி என்ற பெயரில் புதிய தனியார் சுயநிதிக் கல்லூரியினை 2026–27–ஆம் கல்வியாண்டில் துவங்குவதற்கு அனுமதியளித்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

**உயர்கல்வி (இ1) த் துறை**

**அரசாணை (நிலை) எண். 88** — **நாள்: 14 .03.2026**

**ஸ்ரீ விசுவாவசு வருடம், மாசி – 30**

**திருவள்ளுவர் ஆண்டு, 2057**

**படிக்கப்பட்டவை:–**

1. அரசாணை (நிலை) எண்.356, உயர்கல்வித் (இ1) துறை, நாள்: 29.09.2009.
2. அரசாணை (நிலை) எண்.04, உயர்கல்வித் (இ1) துறை, நாள்.07.01.2011.
3. அரசுக் கடிதம் எண்.17861/இ1/2011–1, உயர்கல்வித் (இ1) துறை, நாள்.16.09.2011.
4. அரசாணை (நிலை) எண்.40, உயர்கல்வித் (இ1) துறை, நாள். 28.02.2014.
5. அரசாணை (நிலை) எண்கள். 107, 108 மற்றும் 109, உயர்கல்வித் (இ1) துறை, நாள்.14.05.2015.
6. தருமபுரி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரின் கடிதம் ந.க.எண். 1980/ஆ3/2025, நாள். 26.08.2025.
7. கிருஷ்ணகிரி மாவட்ட வருவாய் அலுவலரின் ஆய்வறிக்கை கடிதம் ந.க.எண்.16397/2025/ ஜே 1, நாள்.26.09.2025.
8. கல்லூரிக் கல்வி ஆணையரின் கடிதம் எண். TNDCE/488/2025/R4, நாள்.16.10.2025 மற்றும் 09.03.2026.

* * * *

<u>ஆணை:</u>

மேலே எட்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கிருஷ்ணகிரி மாவட்டம், காட்டிநாயனப்பள்ளி கிராமத்தில் ராஜீவ் காந்தி கலை மற்றும் அறிவியல் (மகளிர்) கல்லூரி என்ற பெயரில் அரசு நிதியுதவி பெறாத புதிய தனியார் சுயநிதிக் கல்லூரியினை 2026–2027–ஆம் கல்வியாண்டில் தொடங்க, கிருஷ்ணகிரி மாவட்டம், ஸ்ரீ பாலாஜி கல்வி அறக்கட்டளை சார்பில், விண்ணப்பம் பெறப்பட்டு, தருமபுரி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரின் ஆய்வறிக்கை

த.பி.பா...

பெறப்பட்டது எனவும், இக்கல்வி முகமை பின்வருவனவற்றை நிறைவு செய்துள்ளதாகவும், கல்லூரிக் கல்வி ஆணையர் தெரிவித்துள்ளார்:-

(i). கல்லூரிக் கல்வி இயக்குநர் மற்றும் கல்வி முகமையின் பெயரில் கூட்டாக ரூ.20,00,000/- (ரூபாய் இருபது லட்சம்) வைப்புத்தொகை தமிழ்நாடு மின்விசை மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சி கழகத்தில் இரசீது எண். 0988924-இல் 18.08.2025 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

(ii). கிருஷ்ணகிரி மாவட்டம், காட்டிநாயனப்பள்ளி கிராமத்தில் கீழ்க்கண்ட புல எண்களில் 5.91 ஏக்கர் நிலம் கிருஷ்ணகிரி இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் ஸ்ரீ பாலாஜி கல்வி அறக்கட்டளையின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது:-

| **வ.எண்.** | **சர்வே எண்.** | **பரப்பளவு (ஏக்கரில்)** |
|---|---|---|
| i) | 413/2 | 0.80 |
| ii) | 413/4 | 0.50 |
| iii) | 414/2 | 0.20 |
| iv) | 414/3 | 1.00 |
| v) | 414/4 | 1.63 |
| vi) | 414/5 | 1.78 |
| | **மொத்தம்** | **5.91 ஏக்கர்** |

(iii). மேற்கண்ட நிலம் தொடர்ச்சியாக உள்ளது என காட்டிநாயனப்பள்ளி கிராம நிர்வாக அலுவலர் சான்று அளித்துள்ளார்.

(iv). துவங்கப்பட உள்ள கல்லூரி அமையவுள்ள 20 கி.மீ. சுற்றளவில் 6 கல்லூரிகள் மற்றும் 3 பள்ளிகள் இயங்கி வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(v). சுயநிதிக் கல்லூரிகள் தொடங்கி நடத்துவது தொடர்பாக அரசாணைகளில் விதித்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் நிறைவேற்றுவதாக கல்வி முகமை ரூ.20/- முத்திரைத்தாளில் ஒப்பந்தப் பத்திரம் அளித்துள்ளது.

(vi). இக்கல்லூரிக்கென கட்டப்பட்டு வரும் கட்டடத்தில் (RCC) முதலாமாண்டு கல்லூரி நடத்த போதுமான உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அனைத்து அடிப்படை வசதிகளும் உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(vii). கல்வி முகமை சார்பில் ராஜீவ் காந்தி கலை மற்றும் அறிவியல் (மகளிர்) கல்லூரி தொடங்குவது தொடர்பாக விண்ணப்பக் கட்டணம் ரூ.20,000/-ஆய்வுக் கட்டணத்திற்கு ரூ.15,000/- செலுத்தப்பட்டுள்ளது.

2. மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கிருஷ்ணகிரி மாவட்ட வருவாய் அலுவலரின் 26.09.2025-ஆம் நாளிட்ட ஆய்வறிக்கையில், ஸ்ரீபாலாஜி கல்வி அறக்கட்டளை சார்பில் கிருஷ்ணகிரி மாவட்டம், காட்டிநாயனப்பள்ளி கிராமத்தில் ராஜீவ்காந்தி கலை மற்றும் அறிவியல் (மகளிர்) கல்லூரி தொடங்க இருக்கும் கட்டடம் காட்டிநாயனப்பள்ளி கிராம புல எண்கள்.413/2, 413/4, 414/2, 414/5-இல் உள்ள 1.32.50 ஹெக்டேர் நிலத்தில் அமைந்துள்ளது எனவும், கட்டடத்தில் தரைதளம், முதல் மற்றும் இரண்டாம் தளங்களில் தலா 8 அறைகள் உள்ளன எனவும், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறையிடமிருந்து உரிய சான்று பெறப்பட்டுள்ளது எனவும், கல்லூரி அமைய உள்ள புலங்கள் அனைத்தும் புன்செய் நிலங்கள் எனவும், கல்லூரிக்கான கட்டடங்கள் அமைப்பதற்கு, காட்டிநாயனப்பள்ளி ஊராட்சி மன்றத்தலைவரிடம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது எனவும், புதியதாகத் தொடங்கவுள்ள ராஜீவ்காந்தி கலை மற்றும் அறிவியல் (மகளிர்) கல்லூரி தரைதளத்தில் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் Ramp வசதியும், கல்லூரிக் கட்டடத்தில் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் கழிவறை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன எனவும், முதல் மற்றும் இரண்டாம் தளங்களுக்குச் செல்வதற்கு படிக்கட்டு வசதிகள் செய்யப்பட்டு, மின்தூக்கி (Lift) வசதி ஏற்படுத்தப்படவில்லை எனவும் தெரிவித்து, கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் வட்டம், காட்டிநாயனப்பள்ளி கிராமத்தில் ராஜீவ்காந்தி கலை மற்றும் அறிவியல் (மகளிர்) கல்லூரி துவங்குவது தொடர்பான அறிக்கை மற்றும் சரிபார்ப்பு பட்டியலுடன் உரிய ஆவணங்களை இணைத்தனுப்பியுள்ளார்.

3. மேலே ஒன்று முதல் ஐந்தாவது வரை படிக்கப்பட்ட அரசாணைகள்/ கடிதம் மற்றும் தருமபுரி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரின் ஆய்வறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் கீழ்க்காணும் ஆவணங்கள், சார்ந்த கல்வி முகமையிடமிருந்து பெறப்பட்டுள்ளதாக கல்லூரிக் கல்வி ஆணையர் தெரிவித்து, கிருஷ்ணகிரி மாவட்டம், ஸ்ரீ பாலாஜி கல்வி அறக்கட்டளை சார்பில் கிருஷ்ணகிரி மாவட்டம், காட்டிநாயனப்பள்ளி கிராமத்தில் ராஜீவ்காந்தி கலை மற்றும் அறிவியல் (மகளிர்) கல்லூரி என்ற பெயரில், அரசு நிதியுதவி பெறாத தனியார் சுயநிதிக் கல்லூரியினை 2026-2027-ஆம் கல்வியாண்டில் துவங்குவதற்கு உரிய ஆணை வெளியிடுமாறு அரசைக் கோரியுள்ளார்:-

i) கிருஷ்ணகிரி மாவட்ட அரசு வழக்கறிஞரிடமிருந்து நிலம் தொடர்பான சட்டக் கருத்து பெறப்பட்டுள்ளது.
ii) நிலத் தொடர்ச்சி சான்றிதழ் காட்டிநாயனப்பள்ளி கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பெறப்பட்டுள்ளது.
iii) சேலம், பொதுப்பணித்துறை கண்காணிப்புப் பொறியாளரிடமிருந்து கட்டட நிலைத்தன்மைச் சான்று 07.01.2026 முதல் 06.01.2029 வரையிலான காலத்திற்கு பெறப்பட்டுள்ளது.

த.பி.பா...

iv) சென்னை பொதுக் கட்டடச் சட்டம் 1966-இன் கீழ் உயிர் பாதுகாப்பு வரையறையின் படி உரிய பாதுகாப்பு ஏற்பாடு செய்து பொதுக் கட்டட உரிம சான்று வருவாய் துறையிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

v) சூரிய ஒளிமின்தகடு பொருத்தப்பட்டதற்கான சான்று பெறப்பட்டுள்ளது.

vi) கிருஷ்ணகிரி மாவட்ட நகர ஊரமைப்பு துணை இயக்குநரிடமிருந்து கல்லூரிக்கான கட்டட வரைபடத்திற்கான திட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது.

vii) நிலப்பயன்பாட்டுச் சான்றிதழ் கிருஷ்ணகிரி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

viii கிருஷ்ணகிரி காவல் ஆய்வாளரிடமிருந்து போக்குவரத்துத் துறையின் தடையின்மை சான்று பெறப்பட்டுள்ளது.

ix) தீயணைப்பு (மற்றும்) மீட்புத் துறை, தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியம், சுகாதாரத் துறைகளிடமிருந்து சான்றுகள் பெறப்பட்டுள்ளன.

x) கல்லூரிக் கட்டடத்திற்கான வண்ணமிடப்பட்ட நில வரைபடம் (Topo Sketch) கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

xi) தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (உச்ச வரம்பு) சட்டம், 1961-இன்படி 37(B) சான்று பெறப்படவேண்டும்.

4. கல்லூரிக் கல்வி ஆணையரின் பரிந்துரை, தருமபுரி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட வருவாய் அலுவலரின் ஆய்வறிக்கை, மேலே பத்தி 4(i) முதல் (x) வரையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், 2026-2027-ஆம் கல்வியாண்டு முதல், கிருஷ்ணகிரி மாவட்டம், ஸ்ரீ பாலாஜி கல்வி அறக்கட்டளை சார்பில் கிருஷ்ணகிரி மாவட்டம், காட்டிநாயனப்பள்ளி கிராமத்தில் ராஜீவ் காந்தி கலை மற்றும் அறிவியல் (மகளிர்) கல்லூரி என்ற பெயரில், அரசு நிதியுதவி பெறாத புதிய தனியார் சுயநிதிக் கல்லூரியினை, அக்கிராம புல எண்கள். 413/2, 413/4, 414/2, 414/3, 414/4 மற்றும் 414/5-இல் உள்ள நிலத்தில் கட்டப்பட்டுள்ள நிரந்தரக் கட்டடத்தில் (RCC கட்டடம்), முதலாமாண்டில் B.Sc., (Visual Commmunication), B.Sc., (Information Technology), B.Sc., (AI & Data Science), B.Com., மற்றும் B.Sc., (Forensic Science) ஆகிய பாடப்பிரிவுகளுடன் துவங்க கல்லூரிக் கல்வி ஆணையர் தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (உச்ச வரம்பு) சட்டம், 1961-இன்படி 37 (B) சான்றினை சார்ந்த கல்வி முகமையிடமிருந்து மூன்று மாத காலத்திற்குள் பெற்று அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்கின்ற நிபந்தனைக்குட்பட்டு அனுமதி வழங்கலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

த.பி.பா...

5. மேற்கண்ட அனுமதி, கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டது எனவும் அரசு ஆணையிடுகிறது:-

i) கல்லூரியின் நிரந்தர இடத்தில் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளதற்கான உரிய சான்றிதழுடன் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

ii) அனைத்துப் பாடப்பிரிவுகளும் தொடங்குவதற்கு முன்பே சார்ந்த பல்கலைக்கழகத்தின் இணைவு பெறுதல் வேண்டும்.

iii) மேலே பத்தி 4-இல் தெரிவிக்கப்பட்டுள்ள இடம் கல்லூரி பயன்பாட்டிற்காக மட்டும் பயன்படுத்தப் படவேண்டும்.

iv) அரசு எவ்விதமான நிதியுதவியையும் எத்தருணத்திலும் இக்கல்லூரிக்கு வழங்காது.

v) சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்குவது தொடர்பான அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை கல்வி முகமை முழுமையாக நிறைவு செய்யவேண்டும்.

vi) அரசு / பல்கலைக்கழகம் அனுமதித்துள்ள பாடப்பிரிவுகளைத் தவிர வேறு எந்த பாடப்பிரிவுகளையும் கல்வி முகமை கல்லூரியில் தொடங்கக் கூடாது.

vii) பல்கலைக்கழக நிதிநல்கைக்குழு / பல்கலைக்கழகம் / அரசு நிர்ணயித்துள்ள அளவுகோல் மற்றும் கல்வித்தகுதிகளின் அடிப்படையில் மட்டுமே கல்லூரியின் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் பணி அமர்த்தப்படவேண்டும்.

viii) கல்விமுகமை, அரசு அவ்வப்போது நிர்ணயம் செய்யும் ஏற்புடைய கட்டணங்களைத் தவிர முதலீட்டாளர் கட்டணம் அல்லது நன்கொடை ஆகியவற்றை எந்தவிதத்திலும் பெறக்கூடாது.

ix) அரசு/கல்லூரிக் கல்வி இயக்குநரால் நிர்ணயம் செய்யப்பட்ட படிப்புக்கட்டணம், சிறப்புக்கட்டணம், விண்ணப்பக்கட்டணம், பதிவுக்கட்டணம், ஆய்வுக் கட்டணம், காப்புறுதிக்கட்டணம் ஆகியவற்றை மட்டுமே கல்லூரி மாணாக்கரிடம் வசூலிக்கவேண்டும்.

x) கல்விமுகமை, அரசு/கல்லூரிக் கல்வி இயக்குநர் அவ்வப்போது அறிவிக்கும் மாணாக்கர் சேர்க்கைக்கான நெறிமுறைகளைக் கண்டிப்பாக பின்பற்றவேண்டும். மேலும், அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்து, 50 விழுக்காடு இடங்கள் மற்றும் சார்ந்த பல்கலைக்கழகத்திடமிருந்து பெறப்படும் அனைத்து கூடுதல் இடங்களையும் நிரப்ப வேண்டும்.

xi) கல்விமுகமை, இக்கல்லூரியை நிர்வகிக்க முடியாமல் போகும் நிலையில் அதனை அரசு ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முன்வராது.

த.பி.பா...

xii) மின் இணைப்பு தரச்சான்றிதழ் பெறப்பட வேண்டும்.

xiii) அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள இதர நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டு, பின்னர், உரிய அறிக்கை பெற்று, ஆய்வு மேற்கொண்டு உரிய நிரந்தரக் கட்டடத்தில், அனைத்து வசதிகளுடன் சிறந்த முறையில் செயல்பட்டு வந்தால் மட்டுமே தொடர்ந்து இக்கல்லூரி செயல்பட அனுமதிக்கப்படும்.

xiv) கல்லூரியில் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்களை நிரப்பும் போது மாற்றுத் திறனாளிகளுக்கு 4 சதவீத இடஒதுக்கீடு கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

xv) கல்லூரியில் தகுதி வாய்ந்த பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் உதவிப் பேராசிரியர் பணியிடங்களில் நியமனம் செய்யப்பட வேண்டும். இவர்களுக்கு 25 சதவீதம் சம்பள மானியம் அரசால் அளிக்கப்படும்.

xvi) கல்லூரிக் கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு மற்றும் சூரிய எரிசக்தி அமைப்புகள் ஆகியவை ஏற்படுத்தப்படவேண்டும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**பொ. சங்கர்**
**அரசு செயலாளர்**

**பெறுநர்**

கல்லூரிக் கல்வி ஆணையர் சென்னை-15.
மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், தருமபுரி.
மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி
மாவட்ட வருவாய் அலுவலர் கிருஷ்ணகிரி.
பதிவாளர், பெரியார் பல்கலைக்கழகம், சேலம்
செயலர், ஸ்ரீ பாலாஜி கல்வி அறக்கட்டளை, காட்டிநாயனப்பள்ளி கிராமம், குப்பம் ரோடு, கிருஷ்ணகிரி மாவட்டம்-635 120.

**நகல்:-**

மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-09.
அரசு செயலாளரின் தனிச்செயலர்,
உயர்கல்வித் துறை, சென்னை -09.
சுத்த நகல் கோப்பிற்கு (கோப்பு எண். E12033259/இ1/2025)
இ.கோ/உதிரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

க. அம்மாள் 14/03/2026.
**பிரிவு அலுவலர்**
14/3/2026